# தமிழ்ப் பல்கலைக்கழகம்,

## தஞ்சாவூர்- 613 010

## The Tamil University, Thanjavur – 613 010

# தமிழ்ப் பல்கலைக்கழக மனிதவள மேம்பாட்டு மையம்

நடத்தும்

## "பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றல் கற்பித்தலில் அறிவியல் தொழில்நுட்பம் "

(Scientific Technology in Teaching and Learning of Classical Tamil literary and Grammar Books)

(செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நல்கை பெற்றது)

## புத்தொளிப் பயிற்சி **(Refresher Course)**

06.11.2024 முதல் 21.11.2024 வரை பதினான்கு நாள்கள்

## அறிவிப்பும் அழைப்பும்

தமிழர்களின் வாழ்வியல் கூறுகளையும் பண்பாடுகளையும் உலகஅளவில் கொண்டு செல்வது தமிழ் இலக்கியமாகும். பழந்தமிழ் இலக்கியங்களில் தமிழர்களின் கருவூலம் செம்மொழி இலக்கியங்களாகும். தமிழ்ச் செம்மொழிகளாகத் தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், சங்கஇலக்கிய மேற்கணக்கு நூல்கள் (18), சங்கக் கீழ்க்கணக்கு நூல்கள் (18), சிலப்பதிகாரம், மணிமேகலை, முத்தொள்ளாயிரம் ஆகிய 41 நூல்கள் ஆகும். இவ்விலக்கியங்கள் தமிழர்களின் பண்பாட்டினைப் பறைசாற்றுவதைப்போல செம்மொழி இலக்கணங்களிலும் தமிழர்களின் அடிப்படை மொழிக்கூறுகளையும், மொழிப் பயன்பாடுகளையும் உணர்த்துகின்றன. எனவே இவ்விலக்கண இலக்கியங்களை அடுத்த தலைமுறைக்குக் கடத்துவது அவசியமானதாகும். இதன் அடிப்படையில் பல்கலைக்கழக மற்றும் கல்லூரிப் பேராசிரியர்களுக்குப் பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றல் மற்று கற்பித்தலுக்கு அறிவியல் தொழில்நுட்பம் பயன்படுவனவற்றைப் பயிற்சியாக அளித்தல் தேவையான ஒன்றாக அமைகிறது.

காலத்தின் ஓட்டத்திற்கேற்பச் செம்மொழி இலக்கியங்களின் மீது நிகழ்த்தப்படும் ஆய்வுகளும் புத்தாக்கம் பெறுகின்றன. இலக்கியத்தை இலக்கியமாக, பண்டை மக்களின் வாழ்வியலாகக் கற்பிக்கும் நிலையில் மாற்றங்கொண்டு, அதனுள் பொதிந்திருக்கும் சிறப்புக் கூறுகளைப் பிறதுறை அறிவுடன் சார்த்திக் கற்பிக்கும் முறை பரவலாகியுள்ளது. அவ்வகையில் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்னும் முத்தமிழுடன் நான்காம் தமிழான அறிவியல்தமிழும் அதன் தேவையும் இன்று எழுகின்றது.

சங்க கால மனிதர்களின் வாழ்வியலைப் பதிவுசெய்துள்ள இலக்கியச் சான்றுகளே செம்மொழி இலக்கியங்கள். இவ்விலக்கியத் தரவுகளுக்குத் துணைநிற்பன கல்வெட்டு, அகழாய்வுச் சான்றுகளே. இருப்பினும் அந்நாளைய மாந்தரின் அறிவியல் தெளிவையும், மனப்பான்மையையும் அறிந்துகொள்ள அறிவியல்தமிழ் நோக்கே துணைநிற்கின்றது. அவர்கள் இயற்கையிலும், தாவரங்களிலும், விலங்குகளிலும், மருத்துவத்திலும், வானியலிலும் கண்ட தெளிவுகள், மெய்ம்மைகள் இற்றைநாள் அறிவியலுக்கும் அறைகூவல் விடுவனவாய் உள்ளன. அறிவியல்தமிழ் நோக்கில் சங்கத் தமிழ்ப் பண்பாட்டின் வரலாற்றை எழுதிடுவதற்கும், எதிர்காலத் தலைமுறையை வடித்தெடுக்கும் நவீனச் சிற்பிகளான ஆசிரியர்களிடத்தில் அறிவியல்தமிழ் மனப்பான்மையை வளர்க்கவும் அறிவியல் தொழில்நுட்ப முறையில் கற்றல் கற்பித்தல் முறையினை மேம்படுத்தவும் இப்பதினான்கு நாள் புத்தொளிப்பயிற்சி துணைநிற்கும்.

புத்தொளிப் பயிற்சியும் பயன்பாடும்

“**பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றல் கற்பித்தலில் அறிவியல் தொழில்நுட்பம்**” எனும் தலைப்பிலான புத்தொளிப்பயிற்சியின் மூலம் பல்கலைக்கழக, கல்லூரிப் பேராசிரியர்கள் பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களை அறிவியல் தொழில்நுட்பம் வழி கற்பித்தல் முறையினை மேற்கொள்வதன் மூலம் மாணவர்கள் எளிதில் கற்றுப் பயிற்சிப்பெற்றுத் தலைசிறந்த அறிஞர் பெருமக்களாக உருவாகும் வாய்ப்பாக உள்ளது.

இப்புத்தொளிப் பயிற்சி வகுப்பு 06.11.2024 முதல் 21.11.2024 ஆம் நாள் வரை நடைபெறவுள்ளது. புத்தொளிப் பயிற்சி வகுப்பின் விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:

1. புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் நடைபெறும் நாள்கள் 06.11.2024 - 21.11.2024 (14 நாள்கள்: ஞாயிறு, அரசு விடுமுறை நீங்கலாக)
2. புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் நடைபெறும் நேரம் : 10.00 – 01.00 & 02.00 – 05.00
3. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் புத்தொளிப் பயிற்சித் தொடக்க நாளில் பதிவுக் கட்டணம் ரூ.1000/ -ஐச் செலுத்த வேண்டும்.
4. பங்கேற்பாளர் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.
5. பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படி அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
6. பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. புத்தொளிப் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விரும்புவோர் கீழுள்ள விண்ணப்பத்தை நிறைவுசெய்து அதன் மென்படிவத்தை (Softcopy) hrdctamiluni@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். வகுப்பு பற்றிய கூடுதல் விவரங்களைத் தெரிந்து கொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாகவே தொடர்பு கொள்ள வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் தொலைபேசி / அலைபேசி வழியாகத் தொடர்பு கொள்ளக் கூடாது.
8. விண்ணப்பம் உரிய வழியாக வரப்பெற வேண்டும்.
9. தமிழ்ப் பல்கலைக்கழக விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல் / புலனம் வழியாக மட்டுமே அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
10. நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் 25.10.2024. இதற்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டாது.
11. இப்புத்தொளிப் பயிற்சி வகுப்பின் அனைத்து அமர்வுகளிலும் தொடர்ந்து பங்கேற்க வேண்டும். அமர்வுகளுக்குத் தாமதமாக வருவதைக் கண்டிப்பாகத் தவிர்த்தல் வேண்டும். தாமதம் அல்லது இடைநிற்றல் இருப்பின் சான்றிதழ் வழங்கப்பட மாட்டாது.
12. இப்புத்தொளிப் பயிற்சி வகுப்பில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 28.10.2024 அன்று மின்னஞ்சல் / புலனம் வழியாகத் தகவல் தெரிவிக்கப்படும்.

13. பங்கேற்பாளர்கள் புத்தொளிப் பயிற்சி வகுப்பு தொடர்பானத் தமிழ்ப் பல்கலைக்கழக விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.
14. அரசு, அரசு உதவி பெறும் கல்லூரி, சுயநிதிக் கல்லூரி போன்ற நிறுவனங்களில் பணியாற்றும் பேராசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.
15. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் வன்படிவத்தைக் (Hardcopy) கீழே உள்ள முகவரிக்கு அனுப்பவும்.


முனைவர் ப. இராஜேஷ்
இயக்குநர்
மனிதவள மேம்பாட்டு மையம்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் – 613010
செல் : 97888 49914

முனைவர் சி. தியாகராஜன்
ஒருங்கிணைப்பாளர்
புத்தொளிப் பயிற்சி வகுப்பு
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் – 613010
தொடர்புக்கு : 94436 22933